DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No. 279/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW9 | Caste | : | |
| Name | : | சரவணக்குமார் | Age | : | 32 |
| F/N | : | முருகேசன் | Occupation | : | Shooting location manager |
| Village | : | கவிதைகுடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of August 2024.

**08.08.2024**

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் கவிதைகுடியில் குடியிருந்து கொண்டு Shooting location manager ஆக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி திருஞானம் அவசரமான தனக்கு பணத்தேவை இருப்பதாகவும், அதனால் என்னுடைய வங்கி கணக்கில் ஒரு காசோலையை கலெக்சன் போட்டு பணத்தை எடுத்துக்கொள்கிறேன் என்று என்னிடம் கேட்டார் என்றால் சரியல்ல. அவர் அவ்வாறு கேட்டதின் பேரில் நானும், சரி என்று சொல்லி அவர் கொடுத்த காசோலையை எனது வங்கிக்கணக்கில் கலெக்சனுக்கு போட்டு ரூ. 11,000/-ம் எடுத்து 1ம் எதிரியிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. பின்னர் போலீசார் விசாரித்த போது 1ம் எதிரி ராஜா மேல்நிலை பள்ளி நிறுவாகத்திற்கு உரிய பணத்தை தான் என் கணக்கில் போட்டு எடுத்துள்ளார் என்று தெரிந்துகொண்டேன் என்று போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-இல்லை**

**மறுவிசாரணை - இல்லை**

**(ஒப்பம்/-க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No. 279/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW10 | Caste | : | |
| Name | : | ஜெயராஜ் | Age | : | 38 |
| F/N | : | காமாட்சி | Occupation | : | வியாபாரம் |
| Village | : | மூலகொத்தளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 08th day of August 2024.

**08.08.2024**

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் மாவட்டம் மூலக்கொத்தளத்தில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 30.06.2020-ம் தேதி நான் கரூர் வைஸ்யா வங்கி பாரதி நகர் கிளையின் மேலாளராக பணியில் இருந்த போது இராமநாதபுரம் மாவட்ட குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் கொடுத்த விண்ணப்ப கடிதத்தின் பேரில் வடிவேலு வங்கி கணக்கு எண். 1830155000003941, நாகநாதன் வங்கி கணக்கு எண். 1185155000116445, இருதயராஜ் வங்கி கணக்கு எண். 1185135000002133 ஆகியோர்களின் வங்கி பணபரிவர்த்தனை பட்டியலை கொடுத்தேன். **(வடிவேல் என்பவரின் வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாகநாதன் என்பவரின் வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இருதயராஜ் என்பவரின் வங்கி பணபரிவர்த்தனை பட்டியல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் மாவட்ட குற்றப்பிரிவில் இருந்து விண்ணப்பக்கடிதம் வந்தது. விண்ணப்பக்கடிதம் கிடைத்த அன்றே மேற்படி ஆவணங்களை போலீசாரிடம் சமர்ப்பித்தேன். வேண்டுகோள் கடிதத்துடன் வழக்கின் சரித்திரத்தை போலீசார் என்னிடம் கொடுத்தார்கள். வேண்டுகோள் கடிதத்துடன் வந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேண்டுகோள் கடிதத்தின்படி நான்கு நபர்கள் இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ளதாக தெரிந்துகொண்டேன். நான் கடந்த 2016-ம் ஆண்டு மேற்படி வங்கியில் பணியில் சேர்ந்து 2021-ம் ஆண்டு வரை பணிபுரிந்தேன். நான் கடந்த 2013-ம் ஆண்டு முதல் 2020-ம் ஆண்டு வரையிலான பணபரிவர்த்தனை பட்டியலை போலீசாரிடம் வழங்கினேன் என்றால் சரிதான். 2013-ம் ஆண்டு

முதல் 2016–ம் ஆண்டு வரையிலான பண பரிவர்த்தனையை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி மூன்று நபர்களின் வங்கி கணக்கு எண்களை போலீசார் எப்படி தெரிந்து கொண்டார்கள் என்று என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை.

2. போலீசார் என்னை வங்கியில் வைத்தும், காவல் நிலையத்தில் வைத்தும் விசாரித்தார்கள். தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் போலீசார் விண்ணப்பக் கடிதம் கொடுத்த பின்பு மேற்படி மூன்று வாடிக்கையாளர்களை அழைத்து விசாரித்தேனா என்றால் இல்லை. இது சம்மந்தமாக எனது உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். பொதுவாக நிரப்பப்படாத காசோலையை அதை கொடுத்தவருக்கு தெரியாமல் தன் வங்கி கணக்கில் செலுத்தி வேறொரு நபருக்கு பணத்தை கொடுப்பது வங்கி நடைமுறைகளுக்கு எதிரானது என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக மேற்படி வாடிக்கையாளர்கள் மீது நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி வங்கியில் பணியில் இருக்கும் வரை மேற்படி மூன்று வாடிக்கையாளரும் எங்கள் வங்கியில் தங்கள் வங்கிக்கணக்கை வைத்திருந்தார்கள் என்றால் சரிதான்.

3. எங்கள் வங்கியில் செலுத்தப்பட்ட காசோலையை ஒரு நபர் தான் எழுதினாரா என்பதை பற்றி நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி காசோலையை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. காசோலையில் உள்ள கையெழுத்தும் காசோலையை வங்கியில் செலுத்துவதற்குண்டான ரசீதில் உள்ள கையெழுத்தும் ஒன்றாக இருந்ததா என்றால் ஒன்றாக இருந்தது. அந்த ரசீதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வடிவேல் மற்றும் நாகநாதன் ஆகியோர்களின் வங்கிக்கணக்கு Savings Account ஆகும். இருதயராஜ் என்பவரது வங்கி கணக்கு current Account ஆகும். இது சம்மந்தமாக என்னுடன் பணிபுரிந்த ஊழியர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. பொதுவாக காசோலை யார் பெயரில் உள்ளதோ அவர் தான் வங்கிக்கு வந்து காசோலையை செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. வாதியும், போலீசாரும் கேட்டுக்கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)**

<u>மறுவிசாரணை – இல்லை</u>

**(ஒப்பம்/–க. பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண். 2**
**இராமநாதபுரம்**